2002 ஏப்ரல் 18]

இந்நிறுவனத்தில் எல்.பி.ஜி., நாப்தா, மண்ணெண்ணெய், டீசல் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. மேலும் கடலூருக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.3480 கோடி மதிப்பீட்டுச் செலவில் பெட்ரோலியப் பொருட்களைச் சுத்திகரிப்பு செய்யும் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், ஐதராபாத்தில் உள்ள நாகார்ஜுனா உர உற்பத்தி நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. 1,000 ஏக்கர் நிலம், நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது. எஞ்சிய 1,000 ஏக்கர் நிலம், சிப்காட் நிறுவனத்தின் மூலமாகக் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துவிட்டது. முக்கியத் தளவாடங்கள் இறக்குமதி செய்யப்பட்டு, திட்டம் அமல்படுத்தும் இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. பிற சாதனங்கள் வாங்குதல், திட்டத்தின் நிருவாகம், செய்முறை உரிமம் பெறுதல் போன்ற பணிகள் முடிவுற்றுள்ளன. இந்நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். இதன்மூலம் அப்பகுதி இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 166, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வனம், மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

166—

வன வளர்ப்புத் திட்டம்

***3326—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த காலத்தில் வன வளர்ப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.100 கோடி வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ.400 கோடி ஒதுக்கப்பட்டதில், கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.40 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டு, மீதிப் பணம் முழுமையாக செலவு செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது?

மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்தத் திட்டத்தில் 1997-98 முதல் 2000-2001 வரை ரூ.350.34 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் ரூ.344.69 கோடி செலவிடப்பட்டது. இத்தொகையிலிருந்து வேலைகளுக்காக ரூ.293.32 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை நிருவாகச் செலவுகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது.

(ஆ) கடந்த நான்காண்டுகளில் சில முறைகேடுகள் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின்மேல் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 17 வன அலுவலர்கள், 2 மாவட்ட/கோட்ட வன அலுவலர்கள், 11 சரகர்கள் மற்றும் 4 வனவர்கள் பல்வேறு முறைகேடுகளுக்காகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 198 வன அலுவலர்கள்மீதும், ஒரு வனப் பாதுகாவலர், 3 மாவட்ட கோட்ட வன அலுவலர்கள், 125 சரகர்கள், 69 வனவர்கள்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 167, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

167—

பராமரிப்புக் கட்டணம்

***1385—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, ஆனையூரில் கட்டப்பட்டுள்ள வீட்டுவசதி வாரிய வீடுகளுக்குப் பராமரிப்புக் கட்டணம் மாதம் ரூ.60/-லிருந்து உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பழைய பராமரிப்புக் கட்டணமே வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS